# 2 ஆசிய பிராந்தியத்தின் பௌதிக, மானிட சுற்றாடல்

## பிராந்தியத்தின் தனித்துவம்.

புவியின் நிலப்பரப்பளவில் ஏறத்தாழ 1/3 பங்கினைக் கொண்டுள்ள ஆசியாவின் பரப்பளவு 43.6 மில்லியன் சதுர கிலோ மீற்றர் ஆகும். தரை மேற்பரப்பில் இத்தகைய பரந்த பகுதியைக் கொண்டுள்ள ஆசியா பல்வகைத் தரைத்தோற்ற அம்சங்களையும், காலநிலைகளையும், இயற்கைத் தாவரங்களையும் கொண்டுள்ளது. இதன் விளைவாக இப்பிரதேசத்தில் பல்வேறுபட்ட மனித நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இப்பிரதேசத்தின் பௌதிக மற்றும் மானிட சூழலின் இயல்பு, அதன் மாற்றமுறும் பண்புகள், செயன்முறைகள் என்பன பற்றி விரிவாக ஆராய்வதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

இப்பரந்த அளவு பிரதேசத்தைக் கொண்ட ஆசியா உலகப் படத்தில் அமைந்துள்ள சார்பு இடத்தினை இப்போது காணலாம்.

**ஆசியாவின் அமைவிடம்**




தேசப்படம் 2.1

ஆசியப்பிராந்தியத்தின் சார்பு ரீதியிலான அமைவிடத்தைப் பார்க்கும் போது

- வடக்கில் - ஆட்டிக் சமுத்திரம்
- தெற்கில் - இந்து சமுத்திரம்
- கிழக்கில் - பசுபிக் சமுத்திரம்
- மேற்கில் - ஐரோப்பாக் கண்டமும், செங்கடலும்

எல்லைகளாக அமைந்துள்ளதைக் காணலாம். தேசப்படம் 2.2 இனை அவதானித்து அப்பிரதேசங்களை இனங்காண்க.

**ஆசியாவின் தனி அமைவிடமும் தரைத்தோற்ற அம்சங்களும்**




தேசப்படம் 2.2

தனி அமைவிடத்திற்கேற்ப ஆசியா மத்திய கோட்டுக்கு

- வடக்கே - வட அகலாங்கு $80^0$ வரையும்
- தெற்கே - தென் அகலாங்கு $10^0$ வரையும்
- நெட்டாங்கு கிழக்கு $25^0$ - $180^0$ வரையும் பரவிக் காணப்படுகிறது.

இவ்வாறு பரந்திருப்பதால் கிழக்கு அரைக்கோளம் முழுவதும் ஆசியாக் கண்டம் பரவியுள்ளதைக் காணலாம். ஐரோப்பாவிலிருந்து யூரல் மலைத் தொடரினாலும் ஆபிரிக்க கண்டத்திலிருந்து செங்கடலினாலும் ஆசியா பிரிக்கப்பட்டுள்ளது.

**செயற்பாடு**

1. தேசப்படப்புத்தகத்தின் துணையோடு உலகப் புறவுருவப்படத்தில் ஆசியாவைக் காட்டுவதற்காக அதன் எல்லைகளைக் குறித்துப் பெயரிடுக. அதன் தனி அமைவிடத்தைக் காட்டும் வகையில் அகலாங்கு, நெட்டாங்குகளைக் குறித்துக் காட்டுக.
2. ஆசியாக் கண்டத்தின் பரப்பளவினை ஏனைய கண்டங்களுடன் ஒப்பிட்டு நீங்கள் அவதானித்த மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.

உலகின் மிகப்புராதன நிலத்திணிவுகளில் ஒன்றான ஆசியப்பிராந்தியம் உலகின் மிகப்பரந்த கண்டமாகும். இது ஏனைய கண்டங்களை விட (முனைப்பான) தனித்துவமான பௌதீக, மானிடப்பண்புகள் பலவற்றைக் கொண்டுள்ளது. உலகின் புராதன மனித நாகரிகங்களான யூபிரடீஸ் - தைகிறிஸ், இந்து வெளி, குவாங்கோ போன்ற நாகரிகங்கள் இங்குதான் காணப்பட்டன. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், கொன்பியூசியஸ், ஷின்ரோ ஆகிய சமயங்களின் தாயகமும் இதுவே. மிகப்புராதன நீர்வள நாகரிகங்களுக்கு உரிய மீயுயர் நீரியல் தொழினுட்பம் தோன்றிய இலங்கை, இந்தியா போன்ற நாடுகளும் இங்கேயே அமைந்துள்ளன.

**ஆசியாவின் வரலாற்றுச் சிறப்புடைய நதிக்கரை நாகரிகங்களும் நகரங்களும்**




தேசப்படம் 2.3

**எவரெஸ்ட் சிகரம்**



உரு 2.1

உலகின் மிக உயர்ந்த மலைச்சிகரமான எவரெஸ்ட் (8848m), உலகின் மிகத்தாழ்ந்த நிலப்பகுதியான சாக்கடல் (கடல் மட்டத்திலிருந்து 8399m கீழ்) என்பனவும் இப்பிரதேசத்திலேயே அமைந்துள்ளன.

ஆசியப்பிராந்தியத்தை ஐரோப்பாவுடன் ஒன்றாக இணைக்கும் போது யூரேஷியா (Eurasia) என அழை-க்கப்படும் பரந்த நிலத்திணிவைக் கொண்ட கிழக்குப் பகுதி அமைகிறது, ஆசியாவின் மலைத்தொடர்கள், காலநிலை, கலாசாரம் ஆகிய பண்புகளைக் கொண்டு ஆறு வலயங்களை நாம் இனம் காணக்கூடியதாகவுள்ளது. அதனை படம் 2.4 இல் அவதானிக்க.

- வட ஆசியா
- தென் ஆசியா
- கிழக்கு ஆசியா
- மத்தியஆசியா
- தென்கிழக்கு ஆசியா
- மத்திய கிழக்கு அல்லது தென்மேற்கு ஆசியா என்பனவாகும்.

**ஆசியப்பிராந்தியத்தின் பல்வேறு வலயங்கள்**




தேசப்படம் 2.4

## வட ஆசியா

- சைபீரியா சமவெளி துந்திராப் பிரதேசம் இதற்குரியனவாகும்.
- பரந்த சமவெளிப்பகுதியாகும்.
- ஓப், யெனசி, லீனா, அமூர் ஆகிய நதிகள் முக்கியமானவையாகும்
- தைக்கா எனப்படும் ஊசியிலைக் காடுகள் காணப்படுகின்றன.
- அரிமரத்தொழில், நாடோடி விலங்கு வேளாண்மை என்பன இடம்பெறுகின்றன.
- சனச்செறிவு குறைந்த வலயம்

## தென் ஆசியா

- இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பூட்டான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு ஆகிய நாடுகள் இதற்குரியன.
- இமயமலைத்தொடர், சுலைமான் இந்துகுஷ் மலைத்தொடர், பீதுறுதாலகாலை ஆகிய மலைகளையும் இந்துகங்கை சமவெளி, ஹோட்டன்சமவெளி, தக்கண பீடபூமி என்பவற்றையும் கொண்டுள்ளன.
- இந்து, கங்கை, நர்மதா, தப்தி, பிரமபுத்திரா, மகாவலி, நில்வள கங்கை ஆகிய நதிகள் பாய்கின்றன.
- அயன வலயக்காடுகள், காணப்படுகின்றன.
- நெல், கோதுமை, பருத்தி, தேயிலை போன்ற பயிர்களையும், பல்வேறு கைத்தொழில்களையும் காணலாம்.
- சனத்தொகை செறிவு மிக்க வலயமாகும்.

## கிழக்கு ஆசியா

- ஜப்பான் தீவுகள், தாய்வான், தென்கொரியா, சீனா என்பன பிரதான நாடுகளாகும்.
- உயர் பீடபூமிகள், சமவெளிகள் உள்ளன.
- யாங்ஷி, ஷிக்கியாங், குவாங்கோ என்பன முக்கிய ஆறுகளாகும்.
- நெல், கோதுமை போன்ற பயிர்களை பயிரிடும் விவசாய நடவடிக்கைகள் முன்னேற்றம் அடைந்துள்ளன.
- முன்னணிக்கைத்தொழில் நாடுகளைக் கொண்டது. மோட்டார் வாகனங்கள், கப்பல்கள், மின்னியல் உபகரணங்கள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன.
- சனத்தொகை செறிவான வலயம்.

## தென் கிழக்கு ஆசியா

- மியன்மார், இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, கம்பூச்சியா, வியட்நாம் ஆகிய நாடுகள் அடங்குகின்றன. பலதீவுகளும் உள்ளன.
- மலைத்தொடர்களும் அவற்றுக்கு இடையிலான சமவெளிகளும் காணப்படுகின்றன.
- மீனம், மீக்கொங், சல்வீன், ஐராவதி போன்ற நதிகள் முக்கியமானவை.
- அயன வலய மழைக்காடுகளும் பருவக்காற்றுக்காடுகளும் உள்ளன.
- நெற்பயிர்ச்செய்கை, பெயர்ச்சிப்பயிர்ச்செய்கை என்பன பிரதானமானவை.
- பொருத்தும் கைத்தொழில்கள் மின்னியல் சார் உபகரணங்கள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன.

- சனத்தொகை செறிவான வலயமாகும்.

## மத்திய ஆசியா

- தீபெத் பீடபூமி, மொங்கோலியா, ரியான்ஷன், கசகஸ்தான், சீனாவின் மேற்கு பகுதி என்பன இதற்குள் அடங்கும்.
- மலைகளால் சூழப்பட்ட உயர்ந்த பீடபூமிகள், சமவெளிகள் உள்ளன.
- கோபி, தக்லமாகன் போன்ற பாலை-வனங்கள் உள்ளன.
- தாரீம், யாங்சி, குவாங்கோ ஆகிய நதிகள் உற்பத்தியாகும் இடங்களாக இருப்பதுடன் சீர்தாரியா, அமுடாரியா போன்ற உண்ணாட்டு ஏரிகளில் கலக்கும் நதிகளும் உள்ளன.
- வரண்ட பாலைவனக் காலநிலை, தெப்பு (ஸ்ரெபீஸ்) புல்வெளி என்பவற்றைக் காணலாம்.
- நாடோடி விலங்கு வேளாண்மை நடைபெறுகிறது.

## தென்மேற்கு ஆசியா

- அராபியா, ஈரான், ஈராக், துருக்கி ஆகிய நாடுகள் இங்கு உள்ளன.
- மலைகள், பீடபூமிகள் என்பன காணப்படுகின்றன. சாகுரஸ் மலை, காக்கசஸ்மலை என்பன முக்கிய-மானவை. அராபிய பீடபூமி, ஈரான் பீடபூமி, அனடோலியன் பீடபூமி என்பன இதனுள் அடங்கும்.
- யூபிரடீஸ் தைகிறிஸ் நதிகள் பாய்கின்றன.
- வரண்ட பாலைவனப்பண்புகள் உள்ளன.
- கனிய எண்ணெய் முக்கிய வருமானம் பெறும் வழியாகும். பாலைவனப் பசுஞ்சோலைகளில் (Oasis) பேரீந்து திராட்சை போன்ற பழமரங்கள் பயிரிடப்படுகின்றன.

உயர்மலைப்பிரதேசமும் பீடபூமிகளும்



உரு 2.2

**செயற்பாடு**

1. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க

| வலயம் | உரிய பிரதேசங்கள் | தரைத் தோற்றம் | ஆறுகள் | பொருளாதார நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| வட ஆசியா<br>தென் ஆசியா<br>கிழக்கு ஆசியா<br>மத்திய ஆசியா<br>தென்கிழக்கு ஆசியா<br>தென்மேற்கு ஆசியா | | | | |

2. மாணவர்களை ஆறு குழுக்களாகப் பிரித்து இவ்வலயங்களின் பல்வேறு தகவல்கள் அடங்கிய சிறு கையேடு ஒன்றினைத் தயாரிக்கச் செய்க.

## ஆசிய பிராந்தியத்தின் பௌதிக தரைத்தோற்றம்

ஆசியப்பிராந்தியமானது அதற்கு ஒப்பான வேறு கண்டங்களில் இல்லாத அளவுக்குப் பல்வேறு இயற்கைப் பண்புகளைக் கொண்டதாக உள்ளது. இவ்வாறான பல்வகைமை கொண்ட ஆசியாவின் பௌதிகத்தரைத்தோற்றம் பற்றிய விடயங்களைக் கண்டறிவதற்கு தேசப்படம் 2.2 இனை அவதானிக்குக.

ஆசிய வலயத்தின் வடபகுதிச் சமவெளி ஒரு தனித்துவமான தரைத்தோற்றப் பண்பாகும். பெருமளவிலான ஆறுகள் கடலில் சங்கமிப்பது இப்பிரதேசத்திலாகும். இவ்வட பிரதேசம். ஆண்டு முழுவதும் பனியால் மூடப்பட்டிருப்பதால் நீர்பாய்ந்து செல்வதில் ஏற்படும் தடை காரணமாக வடபகுதிச் சமவெளிகளின் சில பிரதேசங்கள் சேற்று நிலங்களாகி உள்ளன. இவை விவசாய நடவடிக்கைகளுக்குத் தடையாக அமைகின்றன.

பெரிய சைபீரியப் புகையிரதப் பாதை இதனூடாகச் செல்வதால் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் ஓரளவு முன்னேற்றமடைந்து காணப்படுகின்றன. எனினும் இப்பகுதி பொதுவாக சனத்தொகை மிகக்குறைந்த பிரதேசமாகும். பாதகமான காலநிலை நிலவுவதுடன் குளிர்காலநிலைக்கு இசைவாக்கமுடைய எஸ்கிமோவரே இங்கு வாழ்கின்றனர். (உரு 2.3)

ஆசியப்பிராந்தியத்தில் உள்ள மிகப்பழைய மலைத்தொடர்களும் மேட்டுநிலங்களும் இன்னுமோர் சிறப்பான பௌதிக தரைத்தோற்றமாகும். பமீர் முடிச்சை மையமாக கொண்டு கிழக்கிலும், மேற்கிலும் நண்டினது கால்கள் விரிந்திருப்பது போல பரந்து செல்லும் மலைத்தொடர்கள் ஆசியாவின் முதுகெலும்பென அழைக்கப்படுகிறது. இம்மலைகள் மேற்குப் புறத்தில் அனட்டோலியன் பீட பூமி வரையும் கிழக்குப் புறமாக சீனா, கிழக்கிந்திய

தீவுகள் வரையும் பரந்திருப்பதை தேசப்படம் 2.2 தெளிவாகப் புலப்படுத்துகிறது. இமயமலை, காரக்கோரம், இந்துகுஷ் ஆகிய மலைத்தொடர்களை ஆசியாவின் தரைத்தோற்றத்தைக் காட்டும் தேசப்படம் 2.2 இல் இனங்காண்க.

**குளிர் காலநிலையும், எஸ்கிமோவரின் இக்ளூ இல்லமும்**





உரு 2.3

## முழுமையாகப் பார்க்கும் போது ஆசியாவின் மலைப்பிரதேசங்கள்

- கரடு முரடானதும் குத்தானதுமான தன்மையால் மக்கள் வசிப்பதற்குப் பொருத்தமானவையன்று.
- நீரேந்து பிரதேசங்கள் பல உள்ளன.
- அல்பைன் வகை புல்வெளிகள் உள்ளன.
- விவசாய நடவடிக்கைகள் நடைபெறுவதில்லை
- (முன்னேற்றமடையாத) நாகரிகமற்ற பழங்குடி மக்கட்கூட்டத்தினர் வாழ்கின்றனர்.
- பனிச்சறுக்கல், மலையேறல் ஆகிய பொழுதுபோக்கு நடவடிக்கைகள் முக்கியமானவை. (உரு 2.4)



**உங்கள் அறிவுக்கு**

இமாலய மலைத்தொடர் உலகின் புவிச்சரிதவியல் சுவர்க்கமாகும்.

இம்மலைகளுக்கிடையில் பீடபூமிகள், பாலை வனங்கள் என்பன காணப்படுகின்றன. செழிப்பற்ற புல் நிலங்கள், மணல் செறிந்த பாலை வனங்கள், பீடபூமிகள் உள்ள இவ்வலயத்தில் சனத்தொகை குறைவாகவே காணப்படுகிறது. எனினும் ஈரான் பீடபூமி, தக்கண பீடபூமி ஆகிய பிரதேசங்களில் வரள் தானியங்கள் பயிர் செய்யப்படுவதுடன் நடுத்தர அளவிலான சனத்தொகையும் பரவிக் காணப்படுகின்றது.

**மலையேறுபவர்**



உரு 2.4

**செயற்பாடு**

1. i. ஆசியப்படத்தை வரைந்து தேசப்படப்புத்தகத்தின் துணையோடு அங்குள்ள உயர் பிரதேசங்களுக்கு நிறம் தீட்டுக.
   ii. இமயமலைப் பிரதேசங்களிருந்து உற்பத்தியாகும் ஆறுகளைக் குறித்துப் பெயரிடுக.
2. ஆசிய வலயத்தில் அமைந்துள்ள மலைகள், பீடபூமிகளை இனங்கண்டு அட்டவணைப்படுத்துக.

உலகின் புராதன நாகரிகங்கள் பலவற்றுடன் தொடர்புடைய ஆசியாவின் ஆற்றுச்சமவெளிகளாக சிந்து, குவாங்கோ, யூபிரடிஸ் தைகிறிஸ் ஆகிய நதிகளைக் குறிப்பிடலாம்.

பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் பெறும் ஆற்றுச் சமவெளிகள் பல தென் ஆசியாவில் அமைந்துள்ளன. அவை கீழே தரப்பட்டுள்ளன. தேசப்படம் 2.2,2.4 ஆகியவற்றை அவதானித்து இந்த ஆற்றுச் சமவெளிகளின் அமைவிடத்தைக் கண்டறியுங்கள்.

- கங்கை நதி
- குவாங்கோ நதி
- ஓப் நதி
- சிக்கியாங் நதி
- மீனம் நதி
- லீனா நதி
- சிந்து நதி
- யூபிரடிஸ் நதி
- தைகிறிஸ் நதி
- யாங்சி நதி
- மீகொங் நதி
- யெனிசி நதி
- ஐராவதி நதி
- அமுர் நதி

இந்த ஆறுகள் பெருமளவில் எப்போதும் வெள்ளப்பெருக்கிற்கு உட்படுவனவாக உள்ளன. இதனால் செழிப்பான மண்ணை உடைய சமவெளிகள் உருவாகியுள்ளன. வெள்ளப்பெருக்கினால் விவசாய நிலங்களும் மனித வாழ்க்கையும் அழிவுக்குட்படும் நிலை காணப்பட்டது. தற்போது பாரிய தடுப்பணைகள் மூலம் வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தக்கூடியதாயிருப்பதால் சனத்தொகை செறிவுள்ள இடமாகமாறியுள்ளது.

- தென்கிழக்கு ஆசியாவில் மீனம், மீக்கொங், சல்வீன், ஐராவதி ஆகிய ஆற்றுச் சமவெளிகளின் அண்மையில் நெற்பயிர்ச்செய்கை பரவிக்காணப்படுகின்றது.
- நெற்பயிர்ச்செய்கையை விட கரும்பு, கோதுமை, பார்லி போன்ற பயிர்களும் இப்பிரதேசத்தில் பயிரிடப்படுகின்றன.
- சனச்செறிவு கூடிய பிரதேசமாகும்.
- அதனால் விவசாய நிலங்கள் துண்டாடப்படுதல் இடம்பெறுகிறது.



**உங்கள் அறிவுக்கு**

சீனாவின் துயரம்/புலம்பல் என்ற பெயரால் குவாங்கோ நதி அழைக்கப்படுகின்றது.

ஆசிய வலயத்தில் ஆற்றுச்சமவெளிகளின் அண்மையில் பல நகரங்கள் அமைந்துள்ளன. உதாரணம் பீஜிங், ஹொங்கொங், ரங்கூன், டாக்கா

ஆசிய பிரதேசத்தில் ஏரிகளும், கடல்களும் அதிகளவில் உள்ளன. இவை பல்வேறு விதங்களில் மனிதனுக்கு பயன்படுகின்றன.

| ஏரிகள் | கடல்கள் |
|---|---|
| ஏரல்<br>பைகால் ஏரி<br>பால்காஸ் ஏரி | ஜப்பான் கடல்<br>அரபிக்கடல்<br>சீனக்கடல்<br>அந்தமான் கடல்<br>மஞ்சட் கடல் |

அட்டவணை 2.1



**உங்கள் அறிவுக்கு**

ஆசியாவின் மிக நீளமான நதி யாங்சிக்கியாங்.

இக்கடல்களும் ஏரிகளும் பல்வேறு வகைகளில் மனிதனுக்குப் பயன்படுகின்றன.

**கடல்**

- மீன்பிடித் தொழிலுக்கு முக்கியம் வாய்ந்தது ஜப்பான் கடலைச் சூழவுள்ள பிரதேசம் முக்கிய மீன்பிடித்தளமாகும்.
- போக்குவரத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. முக்கிய கடற்பாதைகள் அமைந்துள்ளன.
- முருகைக்கற்பாறை, முத்து என்பன பெறப்படும்.
- வங்காள விரிகுடா, அரபுக்கடல் என்பவற்றைச் சூழவுள்ள இடங்களில் எண்ணெய் வளம் உள்ளது.
- கடல் வளம் அனுபவிக்கும் போது கடும்போட்டி ஏற்படுவதுடன் மோதல்களும் ஏற்பட்டுள்ளன.

### செயற்பாடு

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கா | க | ஸ | ஸ் | வி | ட | க் | கா | யெ | க | கோ |
| ரா | கா | ந் | ப | மீ | ர் | சோ | தி | லெ | ன | பி |
| ச் | ங் | சு | லை | மா | ன் | ஜ | ய் | இ | சீ | சி |
| சி | கு | வா | ங் | கோ | ட் | டா | ய | ந் | ன | லி |
| ஏ | ர | ல் | ம் | மி | ல் | ஜெ | ய | து | க் | லை |
| க | னி | ன | சா | அ | சு | சை | ல் | கு | க | ம |
| ங் | மீ | அ | ரு | ன் | பை | ர | பீ | ஷ் | ட | ய |
| கை | கொ | பீ | ஜி | ங் | யூ | கா | ஹெ | ரி | ல் | ம |
| க | யூ | பி | ர | டீ | ஸ் | தி | ல் | ரா | யா | இ |

1. பின்வரும் கட்டங்கள் அடங்கிய மாதிரி ஒன்றை உங்கள் அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்க. இக்கட்டங்களுக்குள் மறைந்துள்ள தரைத்தோற்ற அம்சங்கள் நகரங்கள் என்பவற்றின் பெயர்களைக் கண்டுபிடித்து அடையாளமிடுங்கள்.

2. உலகப் புறவரிப்படத்தில் மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் நீங்கள் இனங்கண்ட ஆசியாவில் உள்ள கடல்கள், ஏரிகள், நதிகள், மலைத்தொடர்கள் என்பவற்றைக் குறித்துப் பெயரிடுக.

## ஆசியப் பிராந்தியத்தின் காலநிலை

ஆசியாவின் காலநிலைபற்றிய தகவல்களைத் தொகுத்து ஆரணி தனது பாடசாலை சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரை கீழே தரப்பட்டுள்ளது.

உலகிலுள்ள அனைத்துக் காலநிலைப்பண்புகளும் ஆசிய வலயத்தில் பரவிக்காணப்படுகிறன. ஏனெனில் மத்தியகோடு தொடக்கம் முனைவுப் பிரதேசம் வரை இவ்வலயம் பரந்து காணப்படுவதாலாகும் இங்கு ஒரு புறத்தில் பனிக்கட்டி வண்டிகளில் மக்கள் பிரயாணம் செய்யும் போது இன்னொரு புறத்து மக்கள் பாலைவனத்தின் மத்தியில் ஒட்டகத்தின் முதுகில் பிரயாணம் செய்வர். எனினும் தீவுகளுக்கு அண்மையிலும் கரையோரப்பிரதேசங்களிலும் வறண்ட காலநிலை காணப்படுவதில்லை. இப்பிரதேசத்திலுள்ள திறந்த நிலங்களின் பெரும்பகுதி பாலைவன பாலைவனங்களாகும்.

**பனிப் பாலைவனம்**



உரு 2.5


**வரண்ட பாலைவனம்**



உரு 2.6

ஆசியாவில் நிலவும் காலநிலையை எளிமையாக காட்டும் தேசப்படம் கீழே தரப்பட்டுள்ளது. தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியவலயத்தில் பருவக்காற்று காலநிலை சிறப்பானதாகும்.

**ஆசியாவின் காலநிலைப் பிரதேசங்கள்**




தேசப்படம் 2.5

தேசப்படம் 2.5இற்கேற்ப ஆசிய வலயத்தின் முக்கிய காலநிலை வகைகளாகப் பின்வருவனவற்றை இனங்காண முடியும்.

1. அயன வலயக் காலநிலை
2. வரண்ட காலநிலை
3. இடைவெப்பக் காலநிலை
4. குளிரான இடைவெப்பக் காலநிலை
5. துந்திரா மற்றும் மலைப்பிரதேசக் காலநிலை

**அயன வலய ஈரக் காலநிலை**



உரு 2.7

## அயன வலயக் காலநிலை

- இதில் பல வகைகள் உள்ளன. (அயனவலய ஈரக் காலநிலை, பருவக்காற்றுக் காலநிலை அயனவலய பாலைவனக்காலநிலை)
- அயனவலய ஈரக் காலநிலை, அயனவலய பருவக்காற்றுக் காலநிலைப் பிரதேசங்களில் ஆண்டு முழுவதும் பரவலாக அதிக வெப்பமும் மழையும் காணப்படும்.
- ஒவ்வொரு வேறுபாட்டுக்குமேற்ப மழை, வெப்பம் என்பன கூடியும் குறைந்தும் காணப்படும்.
- அயனவலய பருவக்காற்று காலநிலை நிலவும் பிரதேசங்கள் விவசாய நடவடிக்கைகளுக்குப் பொருத்தமானவையாகும்.
- தெற்கு, தென்கிழக்கு, தூர கிழக்கு ஆசிய வலயத்தில் அயனவலய பருவக்காற்றுக் காலநிலையைக் காணலாம். பௌதிக சூழல் பொருத்தமானதாக அமைந்துள்ளதால் சனச்செறிவுள்ள பிரதேசமாகக் காணப்படுகின்றது. உரு 2.7 இல் அயனவலய ஈரக் காலநிலைக்கு உரிய இலங்கையின் சிங்கராஜா காட்டின் ஒரு பகுதியே காட்டப்பட்டுள்ளது.

**நாடோடி விலங்கு வேளாண்மை**



உரு 2.8

## வரண்ட காலநிலை

- தென்மேற்கு ஆசியா, மத்திய ஆசியா ஆகிய பகுதிகளில் வரண்ட காலநிலையைக் காணலாம்.
- தென்மேற்கு ஆசிய வலயத்தில் அதிக வெப்பம் நிலவும்.

- மத்திய ஆசியப் பிரதேசத்தில் குளிர் அதிகம். இதனால் சனச்செறிவும் குறைவாக உள்ளது.
- மனித நடவடிக்கைகளில் நாடோடி விலங்கு வேளாண்மை முக்கியம் பெறுகிறது. உரு 2.8 இல் மத்திய ஆசியாவின் விலங்கு வேளாண்மை காட்டப்பட்டுள்ளது. ஓரளவு மழை பெறக்கூடிய பிரதேசங்களில் கோதுமை, பார்லி, போன்ற வரள் தானிய வகைகள், பழப்பயிர்கள் என்பன செய்கை பண்ணப்படுகின்றன.

**பழப்பயிர்ச் செய்கை நிலம்**





உரு 2.9

## இடைவெப்ப வலயக் காலநிலை

- இதில் பல வகைகள் உள்ளன.மத்திய தரைக் கடல் காலநிலை இடைவெப்ப வலயப் பாலைவனக் காலநிலை என்பன முக்கியமானவை
- இலையுதிர்காலத்தில் மழையும் கோடையில் வறட்சியும் மத்திய தரைக்கடல் காலநிலை யின் முக்கிய பண்புகளாகும்.
- இக்காலநிலை மனிதரின் வாழ்க்கைக்கு மிகவும் பொருத்தமானதாகும். ஆசியாவில் மத்திய தரைக் கடலைச் சூழவுள்ள பிரதேசங்கள் இதற்குரியனவாகும்.
- இப்பிரதேசம் அப்பிள், திராட்சை போன்ற பழப்பயிர்ச் செய்கைக்கும் அவற்றின் ஏற்று-மதிக்கும் புகழ் மிக்கவை. (உரு2.9)
- இடைவெப்ப வலயப் பாலைவனக்காலநிலை திபெத்பீடபூமி, கோபி பாலைவனம் போன்ற பிரதேசங்களில் பரவிக்காணப்படுகின்றன. தாவ-ரங்களின் வளர்ச்சி மிகக் குறைவாகும். சனச் செறிவு குறைவான பிரதேசமாகும். இரும்பு, செம்பு, வெள்ளி ஆகிய கனிய வளங்கள் உள்ள இடங்களில் மக்கள் வசிக்கின்றனர்.

**குளிரானகாலநிலை**



உரு 2.10

## குளிரான காலநிலை

- வட ஆசியா, சைபீரியா, வடஜப்பான் என்பன இதற்கு உரியனவாகும்.
- அதிக குளிரானதால் மனித வாழ்க்கைக்கும் பொருத்தமானதன்று.
- ஊசியிலைக் காட்டில் அரிமரக்கைத்தொழில் இடம்பெறுகிறது. உரு 2.10 இனைப் பாருங்கள்.

## துந்திரா மற்றும் மலைப்பிரதேச காலநிலை

- ஆண்டின் பெரும்பகுதி பனியால் மூடப்பட்டிருக்கும்.
- பாசி தவிர வேறு தாவரப்போர்வை எதுவும் இல்லை (உரு 2.11).
- மனித வாழ்க்கைக்குப் பாதகமானவை.

மலைப்பிரதேசம்



உரு 2.11

### செயற்பாடு

1. ஆசிய வலயத்தில் பரவிக் காணப்படும் மூன்று காலநிலை வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. அவை ஒவ்வொன்றினதும் காலநிலைப்பண்புகள் இவ்விரண்டினை விளக்குக.
3. நீங்கள் வாழும் பிரதேசத்தில் நிலவுவதாக கருதக்கூடிய காலநிலை வகையைக் குறிப்பிடுக. அதன் முக்கிய பண்புகள் மூன்றினைத் தருக.

## இயற்கை வளங்கள்

புவியில் மனிதனின் தலையீடின்றி இயற்கையாக உருவானவை இயற்கை வளங்கள் எனப்படும். ஆசியா இத்தகைய வளங்கள் பல நிரம்பப்பெற்றதாகும். இவ்வளங்களிடையே காடுகள், கனிய எண்ணெய் இவ்வளங்களுள், இயற்கை வாயு, சமுத்திரங்கள் என்பன முக்கியம் வாய்ந்தனவாகும். காட்டு வளமானது மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது.

**ஆசியா பிராந்தியத்தில் காடுகளும் அவற்றின் பயன்பாடுகளும்**

| காடுகள் | அமைந்துள்ள இடம் | தாவர வகை | பயன்கள் |
|---|---|---|---|
| 1. ஊசியிலை<br>2. இலையுதிர் | வட ஆசியா (ரஷ்யா)<br>சைபீரியா | மஞ்சட் பைன்<br>செம்பைன்<br>வெண்பைன்<br>டக்லஸ்பேர் | • அரிமரம் பெறுதல்<br>• எரிபொருளாகப் பயன்படுத்தல்<br>• மட்பாதுகாப்பு<br>• சூழல் அழகு<br>• சமநிலையை பாதுகாத்தல்<br>• நிலக்கீழ் நீர் சேமிப்பைப் பாதுகாத்தல்.<br>• கைத்தொழிலுக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தல். |
| 3. அயன வலயம் | இந்தியா<br>மலேசியா<br>இந்தோனேசியா<br>பிலிப்பைன் தீவுகள்<br>இலங்கை<br>மியன்மார் | (கருங்காலி)<br>மகோகனி<br>தேக்கு<br>சந்தன மரம்<br>பொக்ஸ்வூட் | |

அட்டவணை 2.1

**வீட்டுத் தேவைகளுக்காக விறகு சேகரித்தல்**



உரு 2.12

ரஷ்யாவில் அரிமரங்களில் பெருமளவிலானவை வீடுகள் கட்டுவதற்கும் வீட்டுப்பாவனைக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஏற்றுமதிக்கு 20% மட்டுமே பயன்படுத்தப்-படுகிறது. உரு 2.12 இல் வீட்டுப் பாவனைக்கு விறகு கொண்டு செல்லும் மக்கட் கூட்டம் காட்டப்-பட்டுள்ளது.

**கனிய எண்ணெய்**

- ஆசிய வலயத்தில் மத்தியகிழக்கு பிராந்தியம் கனிய எண்ணெயினால் அபிவிருத்தியுடன் தொடர்புடைய புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்ட பகுதியாகும்.
- மத்திய கிழக்குப் பிராந்தியமானது கனிய எண்ணெயினால் பெறும் வருமானத்தின் காரணமாக முன்னர் ஒரு போதும் இல்லாத அளவுக்கு அபிவிருத்தி கண்டுள்ளது.
- எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக ஒபெக் (OPEC) அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதுடன் உலகப் பொருளாதாரத்தல் அதனூடாகச் செல்வாக்கு செலுத்தப்படுகிறது.
- இந்தோனேசியா, இந்தியா, ஆகிய பிரதேசங்களில் எண்ணெய் வயல்கள் காணப்படுகின்றன. வயல்களுக்கு அண்மையிலேயே இயற்கை வாயு வளங்கள் உள்ளன.
- இப்பிரதேசங்களில் எண்ணெய் உற்பத்தியில் பல்தேசிய கம்பனிகளே ஈடுபட்டுள்ளன என்பது முக்கிய அம்சமாகும். எண்ணெயினால் அந்நிய செலாவணி கிடைத்த போதும் வருமானப் பங்கீட்டில் பெருமளவு சமமின்மை காணப்படுகின்றது. இதனால் மனித வளஅபிவிருத்தி மிகத்தாழ்ந்த மட்டத்தில் உள்ளது.

### செயற்பாடு


1. ஆசிரியரின் உதவியுடன் பிலிப்ஸ் தேசப்படப் புத்தகத்தைப் பயன்படுத்தி ஆசியா பிரதேசத்தின் முக்கிய எண்ணெய் வயல்கள், இயற்கைவாயு உள்ள இடங்களைக் குறித்துப் பெயரிடுக.

## சமுத்திர வளம்

ஆசியப் பிரதேசத்திற்குரிய கடற்கரையோரம் 62,800 கிலோமீற்றராகும் (39,000மைல்). இவ்வலயத்திற்குரிய கடல்கள், சமுத்திரங்கள் என்பவற்றை நீங்கள் ஏழாம் வகுப்பில் கற்றுள்ளீர்கள். ஆசிய வலயத்தின் சமுத்திர வளம் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. போக்குவரத்து, மீன்பிடி, சுற்றுலா நடவடிக்கைகள் என்பன இவற்றுள் பிரதானமானவையாகும்.

உலகின் பிரதான மீன்பிடித்தளங்களில் ஒன்றான வடபசுபிக் மீன்பிடித்தளம் ஆசியாவில் ஐப்பானைச் சுற்றி அமைந்துள்ளது. இது உலகில் பாரிய அளவிலான மீன் இனப்பெருக்கமையமாகும் சமுத்திர வளங்களைப் பெறுவதற்கு நாடுகளிடையே தற்பொழுது கடும் போட்டி இடம்பெறுகிறது.

## சமுத்திரங்களினால் பெறும் பயன்கள்


முருகைக்கற்பாறைகள்



நீர்ப்போக்குவரத்து


இயற்கை அழகு


கனிய எண்ணெய்


சுற்றுலாக் கைத்தொழில்


மீன்பிடிக் கைத்தொழில்

உரு 2.13

சமுத்திரங்களிலிருந்து பெறக்கூடிய பயன்கள் அடங்கிய கையேடு ஒன்றைத் தயாரிக்குக.

## மானிட நிலத்தோற்றம்

முன்னர் கூறப்பட்டுள்ளபடி உலகின் பரந்த நிலத்திணிவை கொண்ட ஆசியா வலயத்தின் பௌதிகப் பல்வகைமை மானிட நிலத்தோற்றத்தின் முனைப்பான வேறுபாடுகளை ஏற்படுத்துவதற்குக் காரணமாக விளங்குகின்றது. ஒன்றுக்கொன்று வேறுபட்ட மனித வர்க்கம், பல்வகைக்கலாசாரம், பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபடும் விவசாய நடவடிக்கைகள், கைத்தொழில்கள் ஆகிய முக்கிய மனித நடவடிக்கைகளினூடாக இப்பல்வகைமையை நன்கு விளங்கிக் கொள்ளலாம். உரு 2.14, 2.15 என்பவற்றினால் ஆசிய வலயத்தில் வாழும் இரண்டு மனித வர்க்கத்தினர் காட்டப்பட்டுள்ளனர். அவர்களின் பரம்பரைப் பண்புகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**மொங்கொலியர்**



உரு 2.14

**கோக்கேசியர்**



உரு 2.15

**மொங்கலொயிட்**
- சீனா
- ஜப்பான்
- மலேசியா
- கொரியா

- கடும் கறுப்புநிற முரட்டு தலைமயிர்
- பொன்னிற அல்லது மஞ்சள் நிறத்தோல்
- தட்டையான முகம்
- தட்டையான மூக்கு
- கடும்கபில நிற மெல்லிய கண்கள்
- சுருண்ட கண்ணிமைகள்
- சராசரி உயரமான மற்றும் குட்டையான மனிதர்

கொக்கசைட்
- அரேபியா
- ஆப்கானிஸ்தான்
- பாகிஸ்தான்
- இந்தியா

- இளஞ்சிவப்பு முதல் கடும்கபிலநிறம் வரையான தோல்
- கறுப்பு அல்லது பொன்னிற தலைமயிர்
- கூரிய மூக்கு
- கண்ணிமைகளில் சுருக்கம் பெரிதும் காணப்படுவதில்லை
- தாடை எலும்பு கன்ன எலும்பு முன் தள்ளப்பட்டிருக்கும்.

**ஆசிய வலயத்தின் பல்வேறு நாட்டவர்கள்**



இலங்கையர் அரேபியர் இந்தியர் சீனர்

உரு 2.16

ஆசியாவின் ஒவ்வொரு வலயத்தையும் அவதானித்தால் மனித வர்க்கங்களுக்கிடையில் தெளிவான வேறுபாடுகள் காணப்படுவதை உரு 2.16 இனை அவதானித்து விளங்கிக் கொள்ளலாம். காலநிலை மற்றும் சூழல் காரணிகளுக்கு அமையவே மானிடவர்க்கத்தின் உடல் அம்சங்கள் வேறுபடுவதைக் காணலாம். மேலே குறிப்பிடப்பட்டுள்ள மானிட வர்க்கங்களோடு மலாய் மக்கள் கூட்டத்துடன் கலப்பு ஏற்படுவதால் இவ்வலயங்களில் பல்வகை கலப்பின மக்கள் கூட்டத்தினர் காணப்படுகின்றனர். அவர்களிடையே முஸ்லிம், சீனர், ஜப்பானியர், கொரியர், அரேபியர் ஆகிய மக்கட் கூட்டத்தினரை உதாரணமாகக் காட்டலாம்.

**செயற்பாடு**

ஆசிய வலய நாடுகளில் வாழும் பல்வேறு இனத்தவர்களையும் உள்ளடக்கும் விதத்திலான படங்களின் தொகுப்பேடு ஒன்றைத் தயாரிக்குக.

## கலாசார மரபுரிமைகள்

சமூகத்தில் வாழும் மக்களின் மொழி, ஆடையணிகள், உணவுவகைகள், கலையம்சங்கள், இலக்கியம், கல்வி, சட்டம், பழக்கவழக்கம், ஒழுக்கதர்மம், நம்பிக்கைகள் ஆகிய அனைத்துக் கூறுகளும் கலாசாரம் என கருதப்படுகிறது. மக்கள் சமூகத்தில் காணக்கூடிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதற்கான சக்தியே கலாசாரமாகும். கலாசாரம் என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து கலாசாரம் என்பதால் கருதப்படுவனவற்றை விளக்கமாக அறிந்து கொள்ளுங்கள்.

அறிவு, நம்பிக்கைகள், கலைகள், சட்டம் பழக்கவழக்கங்கள், விழுமிய நடத்தைகள், கருத்துகள் மற்றும் மனிதன் சமூகத்தில் வாழும் ஒருவன் என்ற ரீதியில் பெற்றுள்ள பழக்கங்கள் ஆற்றல்கள் என்பன கலாசாரம் ஆகும்.

(ஈ.பி. டெயிலர்)

இலக்கியம் வரலாறு கலைகள் என்பனவற்றுக்கு அடிப்படை உரிமையாக உள்ளவை கலாசாரம் ஆகும்.


(பிரபு பேர்றன்ட் ரஸல்)

சமூகம் என்ற ரீதியில் குறியீடுகளாக உடைமையாக்கப்பட்டு பரம்பரையாகக் கையளிக்கப்பட்ட அனைத்து நடத்தைக் கோலங்களினதும் கூட்டுப் பெயரே கலாசாரமாகும்.

(சாள்ஸ் ஏ எல்வுட்)

கலாசாரத்துடன் தொடர்புடைய பல்வேறு கூறுகளையும் கீழே காட்டப்பட்டுள்ள வரிப்படத்தில் காணலாம்.


**கலாசாரக் கூறுகள்**




உரு 2.17

சமூகத்தின் மூலம் பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்படும் கலாசாரக் கூறுகளுக்குகேற்ப கலாசாரத்தின் நிலைத்திருப்பு தங்கியுள்ளது. கலாசார தன்மைகள் மாறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பல உள்ளன. உரு 2.17 இனை அவதானித்து அவற்றை இனங்காண்க

**கலாசார மாற்றங்களில் செல்வாக்குச் செலுத ஏதுவான காரணிகள்**




உரு 2.18

## அனைத்துக் கலாசாரங்களுக்கும் பொதுவான அம்சங்கள்

மொழி, ஆடையணிகள், நம்பிக்கைகள், சமயம், நல்லொழுக்கவிதிகள், திருமணம், தொழில் கலையம்சங்கள், கைத்தொழில்கள், பழக்கவழக்கங்கள் சம்பிரதாயங்கள்


பௌத்த விகாரை


இந்துக்கோயில்


கிறிஸ்தவ தேவாலயம்


இஸ்லாமிய பள்ளிவாசல்

உரு 2.19

தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள், மலாயர்கள் ஆகிய பல்வேறு இனத்தவரின் கலாசாரத்திற்கேற்ப அவர்களின் ஆடையணிகள், உணவு, பானங்கள், சமயப்பழக்கவழக்கங்கள் என்பனவும் பல்வகைப்பட்டனவாகும். இதற்கேற்ப எந்தவொரு நாட்டிலும் பல்வேறு இனத்தவரும் சமயத்தவரும் வாழ்வதனால் ஒன்றுக்கொன்று வேறுபட்ட கலாசாரங்களும் உருவாகியுள்ளன. மக்கள் சமூகத்தில் வாழும்-

போது பல்வேறு கலாசாரங்களுக்கிடையிலும் தொடர்புகள் ஏற்படுவதற்கு இடமுண்டு. உரு 2:19 இல் சமய வழிபாட்டுத் தலங்கள் சிலவற்றை பார்க்கலாம்.

**செயற்பாடு**

கலாசாரங்கள் நிலைத்திருப்பதற்குத் தேவையான கூறுகள் உள்ளடங்கிய எண்ணக்கருப்படமொன்றை உருவாக்குக.

## உலக மரபுரிமைகள்


யாதாயினும் ஒரு கலாசாரத்தின் மிகச்சிறந்த புராதன செல்வம் உலக மரபுரிமைகள் என அழைக்கப்படுகிறது. நீங்கள் எட்டாம் வகுப்பில் கற்றுள்ளதன்படி உலக மரபுரிமைகள் இரு வகைப்பட்டனவாகும்

- தொட்டுணரக்கூடியவை - சீனப்பெருஞ்சுவர், சிகிரியா, தாஜ்மஹால்
- தொட்டுணரமுடியாதவை - பழக்கவழக்கங்கள், நடனம், மொழி இலக்கியம்.

இந்த உலக மரபுரிமைகள், வழிபாட்டிடங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், இயற்கையழகினால் சிறப்பிடம் பெறும் இடங்கள், பாதுகாப்பிற்குரிய இடங்கள் எனப் பல விதங்களில் மனிதனுக்கு முக்கியத்துவம் பெற்றனவாக உள்ளன. இதனையொட்டி சுற்றுலாக் கைத்தொழில் விருத்தியடைவதால் வருமானம் பெற்றுக் கொள்வதற்கு அந்த நாடுகளுக்கு வழியேற்படுகிறது. ஆசியப் பிராந்தியம் உலகின் ஏனைய பிரதேசங்களை விட சிறப்பான தனித்துவத்தைப் பெறுவதற்கு இந்த கலாசார மரபுரிமைகளும் செல்வாக்கு செலுத்தியுள்ளன.

உரு 2.20 இல் இலங்கையின் உலக கலாசார மரபாக சீகிரியா காட்டப்பட்டுள்ளது. இது இயற்கையாக அமைந்த எச்சக்குன்று ஆகும். இயற்கையான பாதுகாப்பு காரணமாக பிற்காலத்தில் கோட்டையாக பயன்படுத்தப்பட்டது. கலாசார முக்கியத்துவத்தினால் அது உலக மரபுரிமையாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உலக மரபுரிமையாக்கப்பட்ட பல இடங்கள் ஆசியாப்பிராந்தியத்தில் காணப்படுகின்றன. பல்வேறு கலாசாரங்களுடன் இணைந்த உலக மரபுரிமை-கள் பல உள்ளன. தேசப்படம் 2:6ல் இவற்றை இனங்காண்க.

**சிகிரியா**



உரு 2.20

## உலக கலாசார மரபுரிமைகள்




தேசப்படம் 2.6

### செயற்பாடு

1. ஆசிய வலயத்தில் காணக்கூடிய உலகமரபுரிமைகள் உள்ள இடங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு பாடசாலைச் சஞ்சிகைக்கு கட்டுரை ஒன்றை தயாரிக்குக. படங்களையும் சேகரிக்குக.


2. இலங்கையில் உலக மரபுரிமைகள் எனக்கருதப்படும் இரண்டு இடங்களின் பெயரைக் குறிப்பிட்டு அவைபற்றி சுருக்கக் குறிப்புகள் எழுதுக.

## விவசாயம்

பரந்த நிலப்பரப்பினையும் பல்வேறுபட்ட காலநிலையையும் கொண்ட ஆசியா பிராந்தியத்தில் விவசாயத்திலும் பல்வகைத் தன்மையைக் காணலாம். இதனை தேசப்படம் 2.7 மூலம் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

1. பெயர்ச்சிப் பயிர்ச் செய்கை
2. நாடோடி விலங்கு வேளாண்மை
3. நுகர்வுப் பயிர்ச்செய்கை
4. வர்த்தகப் பயிர்ச் செய்கை

**ஆசியாவின் விவசாயப் பிரதேசங்கள்**




தேசப்படம் 2.7

## பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை

ஆசியாவில் தற்போது நடைபெறும் புராதன விவசாய முறையாகக் கருதப்படும் பெயர்ச்சிப்பயிர்ச்செய்கைமுறை இன்று அருகி வருகிறது. வரையறுக்கப்பட்ட பிரதேசங்களில் மட்டும் இவ்விவசாய முறை எஞ்சியுள்ளது.

பெயர்ச்சி பயிர்செய்கைக்காக காடுகள் அல்லது பற்றை நிலங்கள் சவன்னாப்புல்நிலங்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. நிலையற்ற மழைவீழ்ச்சி, வேறு விவசாய நடவடிக்கைகளை இந்நிலங்களில் மேற்கொள்ளமுடியாமை, இங்கு வாழும் மக்களின் மட்டுப்படுத்தப்பட்ட வளம் ஆகியனவே இத்தகைய விவசாயம் மேற்கொள்ளப்படுவதற்கும் நிலவுவதற்கும் காரணங்களாகும்.

தேசப்படம் 2.7 இல் ஆசியாவின் பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை பரவியுள்ள பிரதேசங்களைக் காணலாம். காட்டுநிலங்களுக்குத் தீயிட்டு மேற்கொள்ளப்படும் பெயர்ச்சி பயிர்செய்கையில் விவசாயநிலத்தின் வளத்தை பாதுகாப்பதற்கு இடையிடையே நிலத்தை மாற்றும் நடவடிக்கை இடம்பெறுகிறது. இதனால் தொடர்ந்து இடம் பெறும் காடழிப்பிலிருந்து சூழலைப் பாதுகாத்தல், மண்கழுவிச் செல்லப்படுவதைத் தடுத்தல், உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களை முதன்மையாக கொண்டு அரசாங்கத்தினால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வகைச் செயற்பாடுகளினாலும் அதிகரிக்கும் சனத்தொகைக்குக் காணிகளை வழங்குதல், பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை நிலங்களை நிலையான விவசாய நிலங்களாக மாற்றுதல் போன்றவற்றாலும் கொண்டு பெயர்ச்சிப் பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தப்படும் நிலங்கள் படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றன. இந்நிலங்களை நிலையான விவசாய நிலங்களாக மாற்றுவதில் பின்வரும் செயற்பாடுகள் செல்வாக்கு செலுத்தியுள்ளன எனலாம்.

- அரசின் கொள்கை
- விவசாயத்துடன் கூடிய வனவளர்ப்பு.
- நீர்ப்பாசன முறைகளை அறிமுகஞ் செய்தல்
- பசளை மற்றும் விவசாய இரசாயன முறைகளைப்பயன்படுத்தல்
- இயந்திர உபகரணங்களைப் பயன்படுத்தப் பழகுதல்
- வர்த்தகப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுதல்

## நாடோடி விலங்குவேளாண்மை

மத்திய ஆசியாவில் தெப்புப் புல்வெளியில் இருந்து பசுபிக் கடற்கரை-யோரப்பிரதேசம் வரையுள்ள பகுதிகளில் இடையிடையே நாடோடி விலங்கு வேளாண்மை இடம்பெறுகிறது.

விலங்கு வேளாண்மையானது வரண்ட பாலைவனத்தை எல்லையாகக் கொண்டபிரதேசங்களில் நடைபெறுகிறது. அங்கு மழை வீழ்ச்சியானது 500மில்லி மீற்றருக்கும் குறைவானதாகவே காணப்படுகிறது. ஆவியாதலும் அதிகளவில்

இடம்பெறுகிறது.

ஆட்டு மந்தை



உரு 2.21

இப்பிரதேசங்களில் குட்டையான புற்கள், பற்றை மற்றும் குட்டையான தாவரங்கள் என்பனவே பெருமளவில் உள்ளன.

மலைப்பகுதிகளில் பயிர் செய்ய முடியாத இடங்களில் விலங்குவேளாண்மை இடம்பெறுகிறது. இந்நிலங்களில் ஆடு, செம்மறியாடு ஆகிய விலங்கினங்கள் வளர்க்கப்படுகின்றன. இவ்வலயத்தில் பசுமையான நிலங்களிலும் அவை போன்ற பௌதிக சூழல் உள்ள வலயங்களிலும் நிலையான விவசாயம் இடம்பெறுகிறது.

ஆசியா வலயத்தின் வடக்கே துந்திரா பிரதேசங்களில் பௌதிக சூழலுக்கேற்ப அதிக குளிரைத்தாக்குப் பிடிக்கக்கூடிய கரிபு துருவமான் போன்ற விலங்குகள் வளர்க்கப்படுகின்றன.

நாடோடி விலங்குவேளாண்மையை மேற்கொள்ளும் விவசாயிகள் ஆரம்பகாலத்தில் ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் தூரத்திற்கு கால்நடையாகச் சென்றனர் சூழல் மாற்றங்கள், புதிதாகத் தோன்றிய மனித நடவடிக்கைகள் என்பன காரணமாக இன்று இவ்வேளாண்மை முறை நடைபெறும் இடங்கள் குறைவடைந்து வருகின்றன. அதற்கான காரணங்கள்

- போதுமான மழை பெறும் பிரதேசங்களில் நிலையான பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல்
- நிச்சயமற்ற மழைவீழ்ச்சி
- பெரிய சைபீரியன் புகையிரதப்பாதையின் இருமருங்கிலும் விலங்குவேளாண்மைக்காக அமைக்கப்பட்டுள்ள நிலங்களில் நிலையான பயிர்ச் செய்கை செய்யப்படுகின்றன.
- வரட்சியைத் தாக்குப்பிடிக்கக்கூடிய தானியங்கள் பயிர் செய்யப்படுதல்
- நிலையான வசிப்பிடங்களை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் ஆதரவு வழங்குதல்.

## நுகர்வுப்பயிர்ச் செய்கை

மனிதர்களின் நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பயிர் செய்கையில் அல்லது விலங்கு வேளாண்மையில் ஈடுபடுதல் இதன் கீழ்

அடங்கும். நெல், தானியங்கள், காய்கறி, பழப்பயிர்கள், பருத்தி ஆகியன பயிர்ச் செய்கையில் முக்கியம் இடம் வகிக்கின்றன. தற்போது நுகர்வுப்பயிர்ச் செய்கையில் பல மாற்றங்கள் இடம் பெற்றுவருகின்றன.

- விவசாய நிலங்கள் நவீனமயப்படுத்தப்படுதல்
- வர்த்தகமயப் போக்கினை கொண்டிருத்தல்
- உயர் சிறப்பியல்புகளை உருவாக்குதல்
- புதிய பயிர் வகைகளை அறிமுகம் செய்தல்

இவ்விவசாய முறைகள் ஆசியப்பிராந்தியத்தின் பௌதிகச் சூழலுக்கு பொருத்தமானதொன்றாகும். இவ்வலயத்தில் உள்ள ஆற்றுச் சமவெளிகள், வண்டற் சமவெளிகள், அதிக மழைவீழ்ச்சி என்பன காணப்படும் நிலங்களில் நெற்பயிர்ச் செய்கை நடைபெறுகிறது. அறுவடைக்காலத்தில் $27^{0}$c வெப்பம் நெற்பயிர்ச் செய்கைக்கு உகந்ததாகும். மனித தேவைகளுக்கேற்ப பொருத்தமான ஈரலிப்புள்ள சரிவுப்பகுதிகளில் படிக்கட்டுப்பயிர்ச் செய்கை முறையில் நெற்பயிர்ச் செய்கை இடம் பெறுகிறது.

**செயற்பாடு**

1 ஆசிய வலயத்தில் செறிவான நுகர்வுப்பயிர்ச் செய்கை பரவுவதில் செல்வாக்குச் செலுத்தும் பௌதிக மானிட காரணிகளை விளக்குக.

## வர்த்தகப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை

ஆசியாவில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை பரவியுள்ள பிரதேசங்களாக தெற்கு மற்றும் தென்கிழக்கு வலயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஐரோப்பியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை இன்றும் அந்த நாடுகளின் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

ஆசிய நாடுகளின் பௌதிகச் சூழல் பொருத்தமாக இருந்தமையாலும் ஐரோப்பிய நாடுகளில் இவ்வுற்பத்திப் பொருட்களுக்கு பெருமளவு கேள்வி இருந்தமையினாலும் ஐரோப்பியர்களால் இப்பயிர்ச்செய்கை அறிமுகஞ் செய்யப்பட்டது.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை எதிர்நோக்கும் பிரச்சினைகள்:

- முதனிலை உற்பத்திகள் சந்தைக்கு அனுப்பப்படுதல்.
- எப்போதும் விலைத்தளம்பல்களுக்கு உட்படுதல்.
- அன்னிய செலாவணி வீழ்ச்சி அடைதல் காரணமாக விவசாய உள்ளீடுகளின் பயன்பாடுகள் குறைவடைதல்.

- தேயிலை, தென்னை, இறப்பர் என்பனவற்றின் உற்பத்திகளுக்கு பிரதியீடுகள் காணப்படுதல் பழவகைகள் (பாம் எண்ணெய், செயற்கை இறப்பர்,)
- பயிர்கள் பழமையானவை என்பதால் அறுவடை குறைவடைதல்.

**பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை**


தென்னை


கொக்கோ


கோப்பி


இறப்பர்


தேயிலை

உரு 2.22

இத்தகைய பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கும் வருமானத்தை அதிகரிப்பதற்கும் பல்வேறு உத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தேயிலை போன்ற வர்த்தகப்பயிர் செய்கை அல்லது வேறு பயிர்ச்செய்கைகளில் சீவனோபாய பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்குப் பயிர்கள் பல்வகைமைப்படுத்தலின் கீழ் இறப்பர் தென்னைப் பயிர்ச் செய்கை நிலங்களில் வாழையும் கொக்கோ பயிர்ச்செய்கை நிலங்களில் வெற்றிலை மிளகு போன்ற பயிர்களைளும் பயிரிடுதல்.
- பாரம்பரிய பொருட்களுக்கு பதிலாக அதிக பெறுமதி வாய்ந்த பொருட்களை சந்தைக்கு அனுப்புதல் உ-ம் வனிலா தேயிலை பசுந்தேயிலை (Green tea) கட்டித்தேயிலை
- விவசாயம் தொடர்பான ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளைப் பயன்படுத்தல் (உ-ம் புதிய விதை வகைகள், பசளைகள்.)

- சந்தைக்கு உற்பத்தியை அனுப்பும் போது விசேட பொதியிடல் முறையைப் பயன்படுத்தல்
- முதனிலைப் பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு செல்வதற்குப்பதிலாக முடிவுப்பொருட்களை தயாரித்தல்
  (உ-ம் டயர் டியூப், பாதணிகள், விளையாட்டுப் பொருட்கள்)

அண்மைக் காலங்களில் விவசாய நடவடிக்கைகளை செறிவாக்குதல் மூலம் ஓரலகு நிலத்திலிருந்து பெறக்கூடிய அறுவடை அடைவினை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தேவையான சந்தர்ப்பங்களில் நீர் வழங்கலுக்காக தகுந்த நீர்ப் பாசனமுறையை ஏற்படுத்தல்.
- விவசாய ஆலோசனைச் சேவைகளை நடைமுறைப்படுத்தல்
- காப்புறுதி சேவையை ஏற்படுத்தல்
- அதிக விளைச்சல் பெறக்கூடிய விதைகளை அறிமுகஞ் செய்தல்.
- விவசாய உள்ளீடுகளை மானியமாக வழங்குதல்

இந்நடவடிக்கைகளுக்காக விவசாய ஆராய்ச்சிகள் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள் மிகமுக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

**செயற்பாடு**

1. ஆசிய பிராந்தியத்தில் விவசாயம் சார்ந்த பிரச்சினைகள் புதிய போக்குகள் என்பவற்றை உள்ளடக்கிய குறிப்பேடு ஒன்றை தயாரிக்குக.

## கைத்தொழில்

பழைய காலந்தொட்டே ஆசிய வலய நாடுகள் கைத்தொழில்துறையில் விருத்தியடைந்த மட்டத்தில் விளங்கின என்பது புராதன நாகரிகங்களில் கண்டெடுக்கப்பட்ட சான்றுகள் மூலம் தெளிவாகியுள்ளன.

- இந்து வெளி நாகரிகத்தில் வெண்கலம் வெள்ளி களிமண் ஆகியவற்றைப் பயன்படுத்திய கைத்தொழில்கள் நிலவின என்பதற்குச் சான்றுகள் உள்ளன. உதாரணம் நடன மாதின் உருவம்.
- யூபிரடீஸ் தைகிறிஸ் மக்கள் வெண்கலத்தின் பயன்பாட்டை அறிந்திருந்தனர்.
- குவாங்கோ சமவெளி மக்கள் அலங்கார மட்பாண்டங்களை அழுத்தமாக்கி கோலங்கள் இட்டனர்.

**நடன மாது**



உரு 2.23

**போரையும் சமாதானத்தையும் காட்டும் செதுக்கல் பலகை**



உரு 2.24

**சீன மட்பாண்டம்**



உரு 2.25

இவ்விடயங்கள் மூலம் ஆசிய நாடுகளில் கைத்தொழில் பற்றிய அறிவு புதியதொன்றல்ல என்பது எடுத்துக் காட்டப்படுகிறது. இக்கைத்தொழில்கள் அனைத்திற்கும் பௌதிக சூழலில் உள்ள இரும்பு, செம்பு, வெள்ளி, களிமண் ஆகிய வளங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. இதிலிருந்து குறித்த பிரதேசத்தில் உள்ள பௌதிக சூழலுக்கேற்ப மனித நடவடிக்கைகள் உருவாகின்றன என்பது நிரூபணமாகின்றது.

முற்காலத்தில் அன்றாட தேவைகளுக்கும் நாட்டின் தேவைகளுக்கும் ஏற்பகைத்தொழில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டபோதிலும் இன்று-வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திக் கைத்தொழில்கள் உருவாக்கப்படுதல் ஆசிய வலய நாடுகளின் கொள்கைகளாக உள்ளன. இதில் செல்வாக்கு செலுத்திய காரணிகளாக உள்ள சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- இரும்பு, தங்கம், வெள்ளி, தகரம் ஆகிய இயற்கை வளங்கள் காணப்படுதல்.
- கனிய எண்ணெய், இயற்கை வாயு போன்ற எரிபொருள் வளங்கள் பெருமளவில் காணப்படுதல்.
- தேர்ச்சியுற்றோர் ஊழியம் எளிதாக கிட்டுதல்.
- அரசுகளும் உள்நாட்டு, வெளிநாட்டு கம்பனிகளும் முதலீடு செய்து கைத்தொழில்களை ஆரம்பித்தல்.

தற்போது இத்தகைய விடயங்களைப் பயன்படுத்தி எல்லா நாடுகளும்-கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. இவ்வாறு ஆரம்பிக்கப்படும் கைத்தொழில்கள் நாட்டுக்குநாடு பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இக்கைத்தொழில்களில் காணப்படும் சிறப்பம்சங்களாவன :

- கைத்தொழில் அபிவிருத்தியில் இறக்குமதிப் பிரதியீடுகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.
- கொரியா, தாய்வான், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் பொருத்தும் கைத்தொழில்களை ஆரம்பித்தல்
- சிறப்புக் கைத்தொழில் வலயங்களை ஏற்படுத்துதல். உதாரணம் இந்தியாவில் தாமோதர், ஜப்பானில் டோக்கியோ, கோபே போன்ற கைத்தொழில் வலயங்கள்.
- சோவியத் ரஷ்யா போன்ற நாடுகள் பாரக்கைத்தொழில்களுக்கு முதலிடம் அளிப்பது முக்கியமானதாகும்.

எல்லாப் பிரதேசங்களிலும் கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், நிதி வசதிகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாதிருத்தல் ஆசிய வலயக்கைத்தொழில் அபிவிருத்திக்குக் தடையாக உள்ளன. நிதி வளம், உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவற்றை எளிதில் பெறக்கூடிய நாடுகள் தேசியரீதியில் மூலப் பொருட்கள் இல்லாதிருப்பினும் பலமான கைத்தொழில் அடிப்படையை ஏற்படுத்துவதில் வெற்றிகண்டுள்ளன. உதாரணமாக ஜப்பானில் வளம் இல்லாதிருந்தபோதும் நிதி வளம், நவீன தொழினுட்பம், வினைத்திறன் மிக்க ஊழியம் என்பவற்றில் மிக முன்னேற்றம் அடைதல் மூலமாக அது கைத்தொழில் அபிவிருத்தியைப் பெற்றுள்ளது. ஆசிய வலய நாடுகளின் ஊழிய வளம், சந்தை வளம் என்பவற்றிலிருந்து பயன்பெறுவதற்காக பல்தேசிய கம்பனிகள் ஈர்க்கப்படுகின்றன.

**ஆடைக்கைத்தொழில்**



உரு 2.26

சீனா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் வெளிநாட்டுச் சந்தைகளுக்காக ஆடைகளை உற்பத்தி செய்வதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. இவற்றுக்கான சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் விளங்குகின்றன.

**ஆசியாவின் கைத்தொழில்களும் அவற்றில் ஈடுபடும்முக்கிய நாடுகளும்**




உரு 2:27

**செயற்பாடு**

1 ஆசிய வலய தேசப்படத்தில் உற்பத்திக் கைத்தொழில்களில் ஈடுபடும் பிரதேசங்கள் ஐந்தினைக் குறித்துப் பெயரிடுக.

## புதிய கைத்தொழில் நாடுகள்

1980 தசாப்தங்களில் துரித கைத்தொழில் வளர்ச்சிக்குள்ளான தென்கொரியா, தாய்லாந்து, மலேசியா, ஹொங்கொங், சிங்கப்பூர் ஆகியன புதிய கைத்தொழில் நாடுகள் எனப் பெயர் பெறுகின்றன. இந்த நாடுகளில் துரித கைத்தொழில் வளர்ச்சி ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள்

- ஊழியம், சந்தை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டமை.
- வெளிநாட்டு மூலப்பொருட்களை அதிக அளவில் பயன்படுத்தல்
- பல்தேசிய கம்பனிகள் இக்கைத்தொழிலுக்காக பெருமளவில் முதலீடு செய்தமையும் புதிய தொழினுட்பப் பரிமாற்றங்களும்.

புதிய கைத்தொழில் நாடுகளில் கணினி மற்றும் வேறு இலத்திரனியல் கருவிகளை பொருத்தும் கைத்தொழில்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். உதாரணமாக:- IBM கணினி உற்பத்தியைக் கூறலாம். இக்கணினியில்

| | | |
|---|---|---|
| விசைப்பலகை | - | சிங்கப்பூர் |
| அச்சுப் பொறி | - | ஜப்பான் |
| மென்பொருள் | - | அமெரிக்கா |
| பொருத்தல் | - | தாய்வான் மூலம் பெறப்படுகிறது |



**உங்கள் அறிவுக்கு**

சிங்கப்பூர், தென்கொரியா, தாய்வான், ஹொங்கொங் என்பன ஆசியாவின் நான்கு சிறுத்தைகள் எனப் பெயர் பெற்று விளங்குகின்றன.

ஆசியாவில் மேலே குறிப்பிடப்பட்ட நாடுகளை விட சீனா மற்றும் இந்தியாவும் இதனுள் அடங்குகின்றன இந்தியா சீனா இஸ்ரேல் போன்றநாடுகள் திறந்த பொருளாதாரவர்த்தகக் கொள்கையால் வெளிநாட்டு மூலதனத்தை பெற்று பெருமளவு சுதந்திர வர்த்தக வலயங்களை ஆரம்பித்துள்ளன. குறைந்தளவு மூலப் பொருட்களைப் பயன்படுத்தி உச்ச அளவு பயன்தரும் பொருட்களை உற்பத்திசெய்தலே புதிய கைத்தொழில் நாடுகளின் சிறப்பியல்பாகும். இப் பொருள்களுக்கான சந்தை ஆசியாவிலே இருப்பதால் அதிக இலாபத்தைப் பெற்றுக் கொண்டன. குறைந்த விலையில் பொருட்களை வழங்கக்கூடியதாக இருப்பதால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் அதிக கேள்வி காணப்படுகிறது.



**உங்கள் அறிவுக்கு**

ஆசியாவின் உறங்கும் இராட்சசன் என சீனா அழைக்கப்படுகிறது.

## மானிட பௌதிக செயற்பாடுகளினால் ஆசிய நாடுகளில் ஏற்படும் பௌதிக மானிட சவால்கள்.

உரு 2.28 இல் செய்திப் பத்திரிகைகளிலிருந்து எடுக்கப்பட்ட சில தலைப்புகள் காணப்படுகின்றன. இந்த செய்திகளால் வெளிப்படுத்தப்படும் ஒரு விடயம் யாதெனில் பல சவால்கள் ஏற்பட்டுள்ளன என்பதாகும். ஆசிய வலயத்தை எடுத்துக் கொண்டால் இந்த சவால்களை எப்போதும் மக்கள் எதிர்நோக்கவேண்டிய நிலை உள்ளது இத்தகைய சவால்களாவன:-

- சனத்தொகை அதிகரிப்பு.
- அரசியல் உறுதியின்மை.
- உணவுக்காப்பை உறுதிப்படுத்தல்.
- சனத்தொகையில் முதியோர்தொகை அதிகரித்தல்.
- வறுமை.
- இயற்கை அனர்த்தங்கள் நிலப்பயன்பாட்டுடன் தொடர்புபடல்.
- நிலப்பயன்பாட்டுடன் தொடர்புடைய பிரச்சினைகள்

**சவால்கள் தொடர்பான செய்தித்தலைப்புகள்**




உரு 2.28

**செயற்பாடு**

**ஆசிய வலய நாடுகள் எதிர் நோக்கும் சவால்கள் பற்றி செய்திப்பத்திரி-கைகளிலிருந்து நாளாந்தம் வெளிவரும் விடயங்களை சேகரித்து தகவற் தொகுப்பொன்றினைத் தயாரிக்குக.**

மானிட மற்றும் பௌதிக செயன்முறைகளின் விளைவாக இத்தகைய சவால்கள் ஏற்படுகின்றன. மானிட செயன்முறைகளால் ஏற்படும் சவால்கள் சிலவற்றுக்குத் தீர்வு காண முடியும் எனினும் பௌதிக செயன்முறைகளால் ஏற்படும் சவால்களைத் தவிர்க்க முடியாதிருப்பினும் அவற்றினூடாக விளையக்கூடிய தீங்குகளைக் கட்டுப்படுத்த முடியும். இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நாடுகள் பல்வேறு நடவடிக்கைகளைப் பின்பற்றுகின்றன. உ+ம் ஜப்பானியர் புவிநடுக்கத்துக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய வீடுகளைக் கட்டுதல், குவாங்கோ வெள்ளச் சமவெளிகளில் நீர் பெருக்கெடுப்பதைத் தவிர்ப் பதற்குத் தடுப்பணைகள் கட்டியமை.



**உங்கள் அறிவுக்கு**

உலகின் அதிகுடியடர்த்தி மிக்க வலயங்கள் இரண்டு ஆசியாவில் உள்ளன

ஆசிய வலய மக்கள் எதிர்நோக்கநேரிடும் முற்குறிப்பிட்ட சவால்கள் காரணமாகப் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. அவை அட்டவணை 2.2இல் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

## ஆசிய நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள்

| சவால்கள் | ஏற்படும் பிரச்சினைகள் |
|---|---|
| சனத்தொகை அதிகரிப்பு | • உணவுப்பற்றாக்குறை.<br>• நிலப்பற்றாக்குறை.<br>• சுகாதாரப்பிரச்சினை.<br>• சமுகப் பிரச்சினைகள்.<br>• சூழல் மாசடைதல்.<br>• வேலையின்மை. |
| உணவுக்காப்பை உறுதிப்படுத்தல | • உணவு வழங்கலில் உறுதியின்மை.<br>• நியாயமான விதத்தில் பகிரப்படாமை.<br>• அபிவிருத்தியடைந்த நாடுகள் உணவை அரசியல் ஆயுதமாக பயன்படுத்தல்.<br>• விலைகள் துரிதமாக அதிகரித்துச் செல்லல்.<br>• கேள்விக்கு சமமாக உற்பத்தியை பெறமுடியாமை. |
| வறுமை<br>*இழிவளவான வாழ்க்கை மட்டத்தையேனும் பெற்றுக் கொள்ள முடியாமை வறுமையாகும்.* | • வருமானத்தை அதிகரிப்பதற்கு முதலீடு செய்ய முடியாமை.<br>• கல்வி பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் இழக்கப்படுதல்.<br>• குறைந்தளவு கல்வி, பயிற்சியின்மை ஆகிய காரணங்களால் தொழில் பெறுவதில் சிரமம்.<br>• நவீன தொழினுட்பங்களை கையாளும் ஆற்றலின்மை.<br>• சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருத்தல். |
| நிலப்பயன்பாடு பற்றிய பிரச்சினைகள் | • காணி துண்டாக்கப்படுவதால் விவசாய நிலங்கள் சிறிதாகுதல்.<br>• பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தல்.<br>• உள்ளீடுகளின் விலை அதிகரித்தல்.<br>• நவீன தொழினுட்பங்களை பயன்படுத்துவதற்கான வசதிகள் இன்மை.<br>• நில உரிமை பற்றிய பிரச்சினைகள்.<br>• நிலத்தை விளைதிறன் மிக்கதாக எடுக்கும் முயற்சி மந்தகதியில் நிகழுதல். |
| முதியோர் தொகை அதிகரித்தல் | • தங்கியிருப்போர் தொகை அதிகரித்தல்.<br>• நலன்புரி நடவடிக்கைகளுக்காக கூடுதல் பணம் ஒதுக்கநேரிடுதல்.<br>• முதியோர் இல்லங்கள் நடாத்தும் நிலையுண்டாதல்.<br>• முதியோர் பாதுகாப்பை நிறைவேற்றும் சமூகம் மற்றும் சட்டரீதியான கொள்கைகள் வலுவிழத்தல். |
| அரசியல் உறுதியின்மை | • புதிய முதலீடுகளில் ஊக்கமின்மை.<br>• உறுதியான அரசுக் கொள்கைகள் இன்மை.<br>• சமய அல்லது பழங்குடிகளின் கிளர்ச்சிகள் ஏற்படுதல்.<br>• சிறுபான்மையினர் எழுச்சி பெறுதல்.<br>• அபிவிருத்தி பாதிக்கப்படுதல்.<br>• நாடுகள் பகுதிகளாக பிரிந்து சுயாட்சியை கோருதல்.<br>• இராணுவம் அரசியல் அதிகாரம் பெறுதல்.<br>• சனத்தொகையில் குறிப்பிட்டபகுதியினர் இடம்பெயருதல். |

| சவால்கள் | ஏற்படும் பிரச்சினைகள் |
|---|---|
| இயற்கை அனர்த்தங்கள் | • சொத்துக்கள் அழிவுறுதல்<br>• உயிர்ச் சேதம் ஏற்படுதல்<br>• பயிர்நிலங்கள் மண்வளம் என்பனஅழிவுறுதல்<br>• காடுகள் அழிவுறுதல்<br>• நோய்கள் ஏற்படுதல்<br>• உற்பத்தி குறைவடைதல்<br>• நாளாந்த நடவடிக்கைகள் தடைப்படுதல்<br>• உட்கட்டமைப்பு வசதிகள் தடைப்படுதல்<br>• வாழ்வாதார வழிகள் அற்றுப்போகுதல்<br>• அனர்த்தங்களுக்கு உள்ளானோர் இடம் பெயருதல் |

அட்டவணை 2.2

**செயற்பாடு**

1. யாதாயினும் ஆசிய நாடொன்றில் வறுமைகாரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைப் பட்டியற்படுத்துக.
2. முதியோர் தொகை அதிகரிப்பதால் ஏற்படும் விளைவுகள் யாவை?
3. அரசியல் உறுதியின்மையால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் மூன்றினைத் தருக.

## சவால்களை இழிவளவாக்க எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள்

ஆசிய வலயத்தில் உள்ள நாடுகள் எதிர்நோக்கும் இத்தகைய சவால்களை வெற்றி கொள்வதற்கு தனித்து ஒரு நாடாக எதையும் செய்தல் இயலாது. இதனால் வலயம் என்ற ரீதியில் இந்நாடுகள் அமைப்புகளாக இணைந்து செயற்படுகின்றன. இவ்வகையில் பல அமைப்புகள் ஆசிய வலயத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. சார்க் (SAARC) ஆசியான் (ASEAN) பிம்ஸ்ரெக் (BIMSTEC) எபெக் (APEC) என்பன இத்தகைய அமைப்புகளாகும். இவை இவ்வலயத்தின் பிரச்சினைகளை இழிவளவாக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் பற்றி இனி ஆராய்வோம்.

## சார்க் அமைப்பு

வலய அமைப்பு என்ற வகையில் சார்க் அமைப்பின் நோக்கங்கள் பலவாகும். இந்நோக்கங்களிடையே ஆசிய வலய சவால்களை வெற்றி கொள்வதில் முக்கியம் பெறும் நோக்கங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

**சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகள்**




உரு 2.29

- தென்னாசிய நாடுகளிடையே கூட்டு நம்பிக்கையை அபிவிருத்தி செய்தல் மற்றும் வலுப்பெறச் செய்தல் என்பவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பயங்கரவாதத்தை ஒழித்தல் மற்றும் அரசியல் உறுதியின்மையைப் போக்குதல் என்பன தொடர்பில் வலயத்தின் பொதுப் பிரச்சினைகளின் போது சர்வதேசரீதியில் வலயமட்ட அடிப்படையில் முன்வருதல்.
- உணவுக்காப்பை ஏற்படுத்துவதற்காக சார்க் விவசாய நிலையம் மற்றும் பாதுகாப்பான உணவுக்களஞ்சியத்தையும் பங்களாதேஷில் அமைத்தல்.
- பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அரசு மட்டத்தில் தலைவர்கள் தீர்மானங்களை மேற்கொள்ளுதல். பயங்கரவாதத்தை தவிர்ப்பதற்கான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல்.
- தென் ஆசிய நாடுகளின் வறுமையை ஒழித்தல்.
- பொருளாதார முன்னேற்றம், சுகாதாரப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் என்பவற்றுக்காக ஜப்பான், சார்க் வெளிநாட்டு நிதியம் தென் ஆசியா அபிவிருத்தி நிதியம் என்பவற்றின் மூலம் ஜப்பான் நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்குதல்.
- வர்த்தகம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை இழிவளவாக்குதல் போன்றவற்றிற்காக சார்க் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1. தென் ஆசிய முன்னுரிமை வர்த்தக உடன்டிக்கையை நடைமுறைப்படுத்தல் (SAPTA)

2. தென் ஆசிய சுதந்திர வர்த்தக அழைப்பினை ஏற்படுத்தல் (SAFTA)

**2008 ஆம் ஆண்டு சார்க் மகாநாட்டுக்காக இலங்கைக்கு வருகை தந்த அரச தலைவர்கள்**




உரு 2.30

### செயற்பாடு

1. நூலகத்தினைப்பயன்படுத்தியும் செய்திதாள், கட்டுரைகளை பயன்படுத்தியும் ஆசிரியரின் உதவியோடும் சார்க் அமைப்பினால் இலங்கை பெற்றுள்ள சேவைகளைப்பட்டியற் படுத்துக.
2. சார்க் வலய பொருளாதார ஒத்துழைப்பினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் நிறைவேற்றப்படாது என்னும் தலைப்பில் வாதம் ஒன்றை நடத்துக.

## தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN)

1967 ஆகஸ்ட் மாதத்தில் தாய்லாந்திலுள்ள பாங்கொக் நகரில் ஆரம்பிக்கப்பட்டது

ஆசியான் அமைப்பின் நோக்கங்களிடையே மேலே குறிப்பிடப்பட்ட சவால்களை வெற்றி கொள்வதற்கு பின்வரும் நோக்கங்கள் நேரடியாக பங்களிப்புச் செய்கின்றன.

- வலயத்தின் சமாதானம் ஸ்திரத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இயற்கை அழிவுகளின் போது அன்னியோன்னிய உதவிகள் வழங்குதல்.
- பொருளாதார அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதலும் வர்த்தகத்தை மேம்படுத்தலும்.
- உணவுக்காப்பை ஏற்படுத்துவதற்காக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

விலங்கு வேளாண்மை அபிவிருத்தி வன அபிவிருத்தித் திட்டங்களுக்கு நியுசிலாந்து ஆதரவைப் பெறுதல், மற்றும் மீன்பிடி அபிவிருத்திக்கு கனடாவின் உதவியைப் பெறுதல்.

இயற்கை அனர்த்தத்திற்கு முன்னரான எச்சரிக்கையை வழங்கல். தெரிவுசெய்யப்பட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இடர்தொடர்பாடல் கேந்திர நிலையங்களை அமைத்தல்.

ஆசியான் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்ப குழுக்களை அமைத்தல்.

- வர்த்தகம் தொடர்பான சவால்களை வெற்றி கொள்வதற்கு அந்நாடுகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையிலான சுங்க வரிக்கொள்கையை நடைமுறைப்படுத்தல்.

**ஆசியான் அமைப்பின் தற்போதைய உறுப்பு நாடுகள்**




உரு 2.31


## செயற்பாடு

1. ஆசியான் அமைப்பு வலய அமைப்பு என்ற ரீதியில் பொருளாதார சமூக மேம்பாட்டுக்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை விளக்குக.

## பிம்ஸ்டெக் அமைப்பு

1997 இல் தாய்லாந்து, மியன்மார், இலங்கை, இந்தியா ஆகிய நாடுகள் இணைந்து இந்த அமைப்பினை ஆரம்பித்தன. 2004ஆம் ஆண்டில் பூட்டான், நேபாளம் என்பன சேர்ந்துகொண்டதுடன் பல்துறை தொழினுட்ப மற்றும் பொருளாதார தொடர்புகளுக்கான வங்காள விரிகுடா வலய அமைப்பாக இது இனங்காணப்படுகிறது.

**பிம்ஸ்டெக் அமைப்பின் உறுப்பு நாடுகள்**




உரு 2.32

வலயத்தின் பொருளாதார சமூக ஒத்துழைப்பு இணக்கப்பாடு என்பவற்றை விருத்தி செய்தல் இந்த அமைப்பின் பிரதான நோக்கமாகும். இதனூடாக வலயத்தின் பௌதிக மானிட சவால்களுக்கு முகம் கொடுக்கும் செயற்பாடுகளை ஆராய்வோம்.

- பயங்கரவாதத்தை ஒடுக்குதல் மற்றும் வன்முறைகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- இயற்கை அழிவுகளை கட்டுப்படுத்துவதற்கு வானிலை அவதான நிலையங்களை அமைத்தல் தொடர்பாக கவனம் செலுத்துதல்.
- வர்த்தகம், முதலீடு ஆகிய நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
- பண்டங்களை ஏற்றி இறக்குதல் தொடர்பாடல் நடவடிக்கைகளை மேம்படுத்தல்

- சுற்றுலா நடவடிக்கைகள், மீன்பிடி நடவடிக்கைகள், விவசாயத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- வறுமையை ஒழிப்பதற்கு ஒன்றிணைந்து பொதுவான கொள்கையைப் பின்பற்றுதல்
- உயிர்ப்பல்வகைமையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல்.
- சூழல் மற்றும் இயற்கை அழிவு என்பவற்றை முகாமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

வங்காள விரிகுடாவுக்கு அண்மையிலுள்ள நாடுகளுக்கு இத்தகைய ஒருங்கிணைப்பு தென்ஆசியாவுடன் தென்கிழக்கு ஆசியாவை இணைக்கும் வலுவான பாலமாகும் என 2008 இல் இடம்பெற்ற மகாநாட்டில் இப்திகா அஹமட் சௌத்ரி (IFTICA AHAMED CHOWDHURI) (பங்களாதேஷ் சர்வதேச விவகார ஆலோசகர்) அவர்கள் கூறியுள்ளார் தென் கிழக்கு ஆசிய வலயத்தின் 1.3 மில்லியன் அளவிலான மக்கள் தனித்தனியாக செயற்படுவதை விட ஒரு கூரையின் கீழே கொண்டுவரப்பட்டு வலயத்தின் பிரச்சினைகள் சிலவற்றிற்குத் தீர்வு காண்பதில் இந்த அமைப்பு வெற்றி கண்டுள்ளது.

**ஒப்படை**

பிம்ஸ்டெக் அமைப்பு தாபிக்கப்பட்ட ஆண்டு, பங்குபற்றிய நாடுகள், நோக்கங்கள், செயற்பாடுகள், இலங்கை பெற்றுக் கொண்ட உதவிகள் ஆகிய தகவல்கள் அடங்கிய சிறு கையேடு ஒன்றைத் தயாரிக்குக

## ஆசிய பசுபிக் வலய பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு (APEC)

அவுஸ்திரேலியாவின் பிரதமராக இருந்த றொபேட்ஹோக் (ROBET HAWKE) என்பவரின் ஆலோசனைக்கேற்ப 1989 நவம்பர் மாதத்தில் ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு தாபிக்கப்பட்டது. இதில் ஜப்பான், அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா அரசுகள், நியூசிலாந்துபோன்ற அபிவிருத்தியடைந்தநாடுகளும் சேர்ந்திருப்பது சிறப்பான அம்சமாகும். ஆசிய வலயத்துக்கு வெளியே உள்ள நாடான மெக்சிக்கோவும் இதற்கு உரித்தான-தாகும்.

இந்த அமைப்பும் வலய அமைப்பு என்ற வகையில் பலநோக்கங்களை கொண்டுள்ளது. ஆசிய வலய நாட்டு மக்கள் எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்கு கீழே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகள் நேரடியாக பங்களிப்பு செய்வனவாகும்.

- வர்த்தகம் தொடர்பான சவால்களை இழிவளவாக்குவதற்கு வலயத்தில் முதலீடு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை முன்னேற்றுதல்
- ஆசிய பசுபிக் வலய இணைப்பினால் பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் (2010 ஆம் ஆண்டில் வலயத்தில் பாரிய சுதந்திர வர்த்தக வலயம் தாபித்தல்)
- வறுமை ஒழிப்புக்கு உரிய மனிதவள அபிவிருத்திக்காக தொழிலின்மைக்கு உதவி, வேலையற்றோருக்கு நிவாரணம் வழங்குதல், காப்புறுதி முறை ஆரம்பித்தல்.
- கோளமயமாதலின் பாதகமான விளைவுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு வலயநாடுகள் ஒன்று சேர்ந்து தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.
- இந்த அமைப்பின் மூலம் சுதந்திர வர்த்தகத்தை ஏற்படுத்துவதற்கு உதவும் முகமாக வலய நாடுகளிடையே அனுபவங்களைப் பகிர்ந்து, கொள்ளுதல் தொழினுட்ப ஒத்துழைப்பு வழங்குதல், உலக வங்கி நிதியிலிருந்து பொருளாதார உதவிகளைப் பெறுதல்

இந்த ஒத்துழைப்பினால் வலய நாடுகளின் வறுமையை 50% அளவு குறைக்க முடிந்ததெனவும் 1989 தொடங்கி 2007 வரை தேறிய தேசிய உற்பத்தி இருமடங்காகி உள்ளது எனவும் 1987 தொடக்கம் இற்றை வரை பொருட்களுக்கு விதிக்கப்படும் 17% அளவான சுங்கவரி 5% மாக குறைந்துள்ளது எனவும் அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டு அமைச்சர் 2007 ஆம் ஆண்டின் மகாநாட்டில் கூறியுள்ளார். இவ்வகையில் பார்க்கும் போது இந்த அமைப்பு அரசியல் செயன்முறையை விட பொருளாதாரத்தினை மேம்படுத்தும் செயன்முறைக்கு அதிக உதவியளித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

**ஒப்படை**

எபெக் அமைப்பு தாபிக்கப்பட்ட ஆண்டு, பங்குபற்றிய நாடுகள், நோக்கங்கள் இலக்குகள், இலங்கை பெற்றுள்ள உதவிகள் என்பன அடங்கிய கட்டுரை ஒன்றினை பாடசாலை சஞ்சிகைக்கு தயாரிக்குக

**செயற்பாடு**

ஆசியாவின் பிரதான ஆறு வலயங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் ஆறு மாணவர்களை தெரிவு செய்து பௌதிக மானுட சூழல் பற்றிய அவ்வலயங்களின் தகவல்களை முன்வைக்கும் விதத்தில் அறிவு பூர்வமான குழுக்கலந்துரையாடலை முன்வைக்குக.

## எபெக் அமைப்பின் உறுப்பு நாடுகள்




உரு 2.33

**மூலங்கள்**


- மானுடப் புவியியல் (க.பொ.த உ.த) கல்வி வெளியீட்டுத்திணைக்களம்
- அடிப்படை இலங்கை, உலகம் மற்றும் பௌதிக புவியியல்
  க.பொ.த.(சா.த) 1972 - N. வீரதுங்க
- சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான கலைக்களஞ்சியம் 2-2002 ஜெயமானபீரிஸ்
- உலக அமைப்புகள் I, III 2002 செனிவிரத்தின ஜமிந்த
- சமூகக்கல்வி ஆண்டு 8 - 1991 கல்வி வெளியீட்டுத்திணைக்களம்
- அடிப்படை புவியியல் 1982 (சிங்கள மொழி பெயர்ப்பு)
- encarta - encyclopediya - 2008
- M.D குணசேனா 2003 புதிய குணசேன பிலிப் தேசப்படப்புத்தகம்.
- சரசவி வெளியீடு 2008 சரசவி பாடசாலை தேசப்படப்புத்தகம்.